பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 28 செவ்வாய்க்கிழமை 13.08.2024 கதிர் 279

# வலிமையான நாடாளுமன்றப் பலம் இருந்தால்தான் சமஷ்டி பற்றிய பேச்சு

## அதுவரை மாகாண சபைதான் என்பதில் ரணில் திட்டவட்டம்
## ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளி கட்சிகளிடம் தெரிவிப்பு



இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சமஷ்டிமுறையான அரசியல் தீர்வு ஒன்றைபலம்மிக்க நாடாளுமன்றம் ஒன்று அமையும் பட்சத்தில்தான் பரிசீலிக்க முடியும் என்று நேற்றுத் தன்னைச் சந்தித்த புளொட்,

2

## இது ரகசியம் அல்ல!

தமிழ்தேசியபொதுக்கட்டமைப்பு என்ற பெயரில் தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச் சபைஎன்றபெயரில்7தனிநபர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தம் எல்லாம் கைச்சாத்திட்டாலும், பொதுக் கட்டமைப்பில் உள்ள அரசியல் கட்சிகளை இந்த ஒப்பந்தங்களால் கட்டுப்படுத்த முடியாது என்பது, இது ஒரு வெத்துவேட்டு, லெட்டர் பாட் அமைப்பு மட்டுமே என்பது நேற்று பட்டவர்த்தனமாக வெளிப்பட்டு விட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில் கலந்துகொண்ட பின்னர் ரெலோ விடுத்திருக்கும் அறிக்கையைப் பார்த்தாலேயே இந்த விடயம் வெளிப்படையாகத் தெரியும். ஜனாதிபதியின் சார்பில் பொதுக் கட்டமைப்பின் உறுப்பினர்களை சந்திப்பதற்கான அழைப்பு தனித் தனியாக அரசியல் கட்சிகளுக்கும் பொது அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளுக்கும் விடுத்திருந்தது என்று அந்த அறிக்கை தெளிவாகக் குறிப்பிடுகின்றது. அதனடிப் படையில்தான் தாங்கள் ஜனாதிபதியைச் சந்தித்தோம் என்றும் அறிக்கையில் சுரேந்திரன் குருசாமி தெரிவித்திருக்கிறார். அதேநேரம்

2

## நீதி அமைச்சையும் நேற்று பொறுப்பேற்றார் அலி சப்ரி

அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராக நேற்றுப் பதவியேற்றுக்கொண்டார்.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்ப அமைச்சராகப் பதவி வகித்து வந்தவரான விஜயதாச ராஜபக்ச, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதையொட்டி பதவி விலகியதைத்தொடர்ந்துநீதிஅமைச்சை அலி சப்ரி பொறுப்பெடுத்துள்ளார்.

அமைச்சர் விஜயதாசவின் பதவி விலகலைத் தொடர்ந்து நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசலமைப்புமறுசீரமைப்புஅமைச்சுப் பதவிகளை தனது அதிகாரத்தின்

2

## ஒக்டோபரில் ரூபாய் 6000 ஓய்வூதியர்களுக்கு கிட்டும்

ஓய்வூதியர்கள்அனை வருக்கும் ஒக்டோபர் மாத ஓய்வூதியத்துடன் கூடுதலாக ரூ. 6,000 வழங்கப்படும் என்று ஆளும் தரப்பு அறிவித்துள்ளது. இந்தத் தொகையில் ஒக்டோபர் மாதத்திற்கான இடைக் காலஉதவித்தொகைரூ. 3000 மற்றும்செப்டெம்பர் மாதம் வழங்கப்பட வேண்டியகொடுப்பனவு நிலுவை ரூ-. 3,000 அடங்கியிருக்கும் என நிதிஇராஜாங்கஅமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இது தொடர்பான அமைச்சரவைப்பத்திரம் ஜனாதிபதியினால்சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இந்த கூடுதல் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நிதி அமைச்சு முழு எழுத்துப்பூர்வ

2

## 32 பேர் இதுவரையிலும் கட்டுப்பணம் செலுத்தினர்

செப்டெம்பர் 21நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்றுவரையில் 32 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். அங்கீகரிக்கப் பட்டஅரசியல்கட்சிகள்சார்பில் போட்டியிட 16 வேட்பாளர்களும், வேறு அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 1 வேட்பாளரும், சுயேச்சை வேட்பாளர்களாப்போட்டியிட 15 பேரும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கட்டுப்பணம் செலுத்தல் நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவுபெறும். அத்துடன் நாளைமறுதினம் வியாழக் கிழமை காலை 9 மணி முதல் 11 மணிவரையான காலப்பகுதியில் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஐதுருஸ் முஹம்மது இல்யாஸ், எம் திலக ராஜா, பா.அரியநேத்திரன் ஆகியோர் சுயாதீன வேட்பாளராக போட்டியிட நேற்றுக் கட்டுப்பணம் செலுத்தினர். ஐக்கிய ஜனநாயக கூட்டணியின் சார்பில்மொஹமட் இன்பாஸ் போட்டியி-டுவதற்கான

2

## வேட்புமனுவில் ஒப்பமிட்டார் அனுர நாட்டை மீட்க தயார் எனவும் உரை

ஜனாதிபதித்தேர்தலுக்கான வேட்புமனுவில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க நேற்றுக் கையெழுத்திட்டார். அதன்பின்னர்செய்தியாளர்களுடன்பேசியஅவர், பெரும் நெருக்கடிக்குள் இருந்து இலங்கை நாட்டையும்மக்களையும் மீட்டெடுப்பதற்கான சவாலை தேசிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்ளத் தயார், எனவே இன்று நான் வேட்புமனுவில் இட்டஇந்தக்கையொப்பம் நிச்சயமாகவெற்றிக்கான கையொப்பம் - என்றார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இப்பொழுதுஏனைய பாசறைகள் ஒவ்வொரு குழுவாகப் பிரிந்து, சிதைந்துஅழுக்குகளைச் சேகரிக்கும் நிலைக்கு மாறியுள்ளன. தேசிய மக்கள் சக்தியாகிய நாம் ஒன்றரைவருடங்களுக்கு முன்னரே எமது பயணத்தை சரியாக ஆரம்பித்தோம்.

நாங்கள்மிகவும்பலம் பொருந்தியவகையிலும் ஒழுங்கமைந்த வகையிலும்பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டி இற்றைவரை இந்தப் பயணத்தை

2

## இலங்கை – இந்திய பயணிகள் கப்பல் ஓக. 16 சேவையைத் தொடங்குகிறது

### இன்று நள்ளிரவு முதல் ரிக்கெற் பதிவு

இலங்கையின்காங்கேசன்துறை மற்றும் இந்தியாவின் நாகப்பட்டினம் இடையேயான பயணிகள்கப்பல்சேவை ஓகஸ்ட் 16 தொடங்கப்படும்என்று இண்ட்ஸ்ரீ ஃபெர்ரி சேர்வீஸ் பிரை வேட் லிமிடெட் தெரிவித்துள்ளது.

இதற்காக'சிவகங்கை' பயணிகள் கப்பல் இரு நாடுகளுக்கும்இடையில் சேவையை மீண்டும் தொடங்க தயாராக உள்ளதாக நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எஸ். நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்தார்.

இந்தக் கப்பல் பயணத்திற்கான ஒன்லைன் டிக்கெற் விநியோகம் இன்று செவ்வாய்க்கிழமை நாகப்பட்டினம்துறைமுகத்தில் நள்ளிரவு (12) முதல் தொடங்கும். முன்னதாக, பயணிகள் கப்பல் சேவையை மே 13 தொடங்கத் திட்டமிடப்பட்டிருந்தது, ஆனால் 'சிவகங்கை' கப்பலை பயணிகளின் பாதுகாப்பான பயணத் திற்குஉற்பத்தயார்ப்படுத்த வேண்டியிருந்ததன் காரணமாக பின்னர் அது பிற்போடப்பட்டது.

## தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் சஜித்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்



ஐக்கிய மக்கள் கூட்டணியின்ஜனாதிபதி வேட்பாளர்சஜித்பிரேமதாஸவுக்கும் தமிழ் முற்போக்குக்கூட்டணிக்கும் இடையிலான நேற்றுத் தேர்தல் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வில், சஜித் பிரேமதாஸவுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணியின்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன், பிரதித்தலைவர், நாடாளுமன்றஉறுப்பினர்ப.திகாம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான வே.இராதாகிருஷ்ணன், எம்.வேலுகுமார் ஆகியோர் இந்த நகழ்வில் கலந்துகொள்ளவில்லை. நேரமின்மை காரணமாக அவர்கள் கலந்துகொள்ளவில்லை என்றுதெரிவிக்கப்பட்டது.

இந்த ப

2

## பெருந்தோட்ட தொழிலாளர் சம்பளம் இனி 1,700 ரூபாய்

### சம்பள நிர்ணய சபை தீர்மானம்

'பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாய் வழங்கப் படவேண்டும் என்று சம்பள நிர்ணய சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இதன்மூலம்தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பளஉயர்வுகிடைக்க வுள்ளது, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளைநிறைவேற்றியுள்ளேன் - என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த அடிப்படைச் சம்பளமாக 1,350 ரூபாயும், உற்பத்தி ஊக்குவிப்பு விசேட கொடுப்பனவாக 350 ரூபாவும் வழங்கப் படவேண்டும் என்று சம்பள நிர்ணய சபை தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் ஜிவன் தெண்டமான தெரிவித்ததாவது:

அன்று

2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பொதுக் கட்டமைப்பாக இந்தச் சந்திப்பில் கலந்துகொள்வதில்லை என்று முடிவெடுக்கப்பட்டிருப்பதாக ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதியுடனான சந்திப்பு பொதுக் கட்டமைப்பின் சந்திப் பல்ல அரசியல் கட்சிகளின் சந்திப்பாக வேண்டுமானால் இருக்கலாம் என்று இப்போது பொதுக் கட்டமைப்புக்காரர்கள் சளாப்புகிறார்கள். ஆனால், சுரேந்திரனின் அறிக்கையோ தாம் பொதுக் கட்டமைப்பு சார்பில், பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டதன் பின்னணியில்தான் இந்தச் சந்திப்பில் பங்கேற்றதாகக் கூறுகின்றது. அது மட்டுமல்ல, ஜனாதிபதியுடன் இதுபோன்ற இனிவரும் சந்திப்புக்களிலும் தாம் கலந்துகொள்வர் என்றும் இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் வாக்குறுதியளித்துள்ளனர்.

பொதுக் கட்டமைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபோது, தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகிய இரு தரப்பும். ஒரு பொதுக் கட்டமைப்பாக செயற்படுபவர்கள் என்னும் அடிப்படையில் கூட்டுப் பொறுப்புடையவர்கள் என்பதில் இணக்கம் காணப்படுகிறது என்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள், மட்டுமன்றி இந்த ஜனாதிபதித் தேர்தலைக் கையாள்வதற்காகத்தான் இந்தக் கட்டமைப்பே என்றும் அறிவித்திருந்தார்கள். ஒரு மாதத்திற்குள்ளேயே எல்லாம் காற்றில் பறந்துபோய்விட்டது. அது மட்டமல்ல பொதுக் கட்டமைப்பைக் கேட்காமலேயே அதனுடன் கலந்துரையாடாமலேயே இனியும் ஜனாதிபதியுடன் சந்திப்புக்களுக்கு வருவோம் என்றும் சொல்லிவிட்டு வந்திருக்கின்றன பொதுக் கட்டமைப்பில் இடம்பெற்றுள்ள கட்சிகள். இதே ரெலோவும் புளொட்டும்தான் பேச வரும்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்கு முன்னர் அழைத்தபோது அந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்வதால் எந்தப் பயனும் இல்லை என்று கூ-றி அதற்குச் செல்லாமல் அரசியல் நாடகமாடியவர்கள். ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று ஜனாதிபதியின் கூட்டங்களுக்குச் சென்ற தமிழ் அரசுக் கட்சிக்குத் துரோகப் பட்டம் சூ-ட்டியவர்கள். இப்போது பொதுக் கட்டமைப்பையும் உடைத்துக் கொண்டு ரணிலின் சந்திப்புக்கு ஓடோடிப்போய் காலில் விழுகிறார்கள். அவர்களின் உண்மை முகத்தை தமிழ் மக்கள் அனைவரும் புரிந்துகொள்ளும்போது அவர்களின் முகமூடிகள் கிழிக்கப்பட்டு அவர்கள் விரட்டப்படுவார்கள்.

.................

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னைச் சந்திக்குமாறு தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுந்திரனைச் சந்திக்க வருமாறு தானே அவருக்கு அலைபேசி மூலம் அழைப்பு விடுத்திருந்தார் என்கிற தகவலை நேற்றே தந்திருந்தேன். அந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நாளை புதன்கிழமை பகல் 11.3-0 மணியளவில் இடம்பெறவுள்ளது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைத் தான் நடைமுறைப் படுத்தப் போகின்ற விடயங்கள் எவை என்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்காகத்தான் ரணில் சுமந்திரனைச் சந்திக்கிறார் என்று தெரிகிறது. மாகாண சபைகளிடம் இருந்து திரும்பப் பெறப்பட்ட அதிகாரங்களை மீண்டும் வழங்குவதற்கும், 13ஆவது திருத்தத்தில் உள்ளவற்றில் ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பயன்படுத்தி நிறைவேற்றிக்கொள்ளக் கூடியவற்றையும் பற்றிய ஓர் விரிவான அறிக்கையை சுமந்திரன் ஏற்கனவே ரணிலிடம் வழங்கியிருந்தார். அதிலிருந்து தான் உடனடியாக நிறைவேற்றக்கூடியவைகள் என்றொரு ஆவணத்தைத் தயாரித்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணம் வந்தபோது அதனைத்தான் மாவை சேனாதிராசாவிடம் வழங்கியிருந்தார். நேற்று ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பவற்றிடமும் வழங்கியிருந்தார். இந்த ஆவணத்தில் கடைசியாக அவர் மேற்கொண்ட திருத்தங்கள் உள்ளிட்ட சில விடயங்கள் குறித்து கலந்துரையாடவே அவர் சுமந்திரனுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

ஒருவேளை ரணில் நல்லவராக நடந்துகொண்டுதான் கூறியவற்றை நடைமுறைப்படுத்தினால் அதன் பெயரும் புகழும் தமிழ் அரசுக் கட்சிக்கும் சுமந்திரனுக்கும் கிடைத்துவிடுமோ என்கிற பதற்றம்தான் பொதுக்கட்டமைப்புக் போனால் போகிறது என்று தூக்கி எறிந்துவிட்டு, துடிக்கப் பதைக்க நேற்று ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க மற்றைய கட்சிகள் ஓடிப்போனதற்கான காரணம். என்னே ஒரு அரசியல் தூரநோக்கு!

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## வலிமையான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலோ, ஜனநாயகப் போராளிகள் கட்சிகளின் தலைவர்களிடம் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதுவரைக்கும் அரசமைப்பின் 13ஆவது திருத்தமே நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் தலைமைக் குழுவைச் சேர்ந்தவர்களைத் தன்னை வந்து சந்திக்கும்படி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருந்தார். ஆனால், தேர்தல் பணிகள் இருந்த காரணத்தால் இந்தச் சந்திப்புக்குப் போவதில்லை என்று பொதுக் கட்டமைப்பின் தலைமைக் குழு தீர்மானித்தது. இருந்தாலும் அந்தக் கட்டமைப்பில் இடம்பெற்றுள்ள ரெலோ, புளொட் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்கி ஆகியவற்றின் தலைவர்கள் நேற்று ஜனாதிபதி ரணிலை நேரில் சந்தித்துப் பேசினர். ரெலோவின் செயலாளர் கோவிந்தம் கருணாகரன் மற்றும் அந்தக் கட்சியின் பேச்சாளர் சுரேன் குருசாமி, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் துளசி ஆகியோரும் சந்திப்பில் உடனடிருந்தனர். ஜனாதிபதி செயலகத்தில் மாலை 4 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ரெலோவின் பேச்சாளர் சுரேன் குருசாமி வெளியிட்ட அறிக்கையிலேயே பலமான நாடாளுமன்றம் அமைந்தால் சமஷ்டி பற்றிப் பேச முடியும் என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. ஜனாதிபதி செயலகத்தால் இந்தச் சந்திப்புத் தொடர்பில் எந்தவிதமான உத்தியோகபூர்வ அறிக்கையும் விடப்படவில்லை.

சுரேன் குருசாமியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்த் தேசியப் பொது கட்டமைப்பு பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கிய சூழலிலே, இச்ச சந்திப்புக்கான அழைப்பை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடுத்திருந்தார். வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளராக பொதுக்கட்டமைப்பின் உறுப்பினர்களை சந்திப்பதற்கான இந்த அழைப்பு தனித்தனியாக அரசியல் கட்சிகளுக்கும் பொது அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளுக்கும் விடுக்கப்பட்டிருந்தது.

இந்த அடிப்படையிலேயே மேற்குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் இந்த அழைப்புக்கு மதிப்புக் கொடுத்து தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமான தங்களுடைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவும் ரணில் விக்ரமசிங்க, தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாசைகளைத் தீர்ப்பதற்காக முன்னெடுக்க உள்ள நடவடிக்கைகளைப் பற்றி தெரிந்து கொள்வதற்காகவும் இச்சந்திப்பில் பங்கேற்பதெனவும் முடிவுசெய்தனர்.

இச் சந்திப்பில் பிரதானமாக, தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாசைகளைத் தீர்க்கும் முகமான சமஷ்டி முறையான அரசியல் தீர்வு தொடர்ந்தும் எட்டப்படாமல் இருப்பதனாலேயே பொதுவேட்பாளர் என்ற முடிவு எட்டப்பட்டுள்ளது என்பது தெளிவுபடுத்தப்பட்டது. ஜனாதிபதி தரப்பில், சமஷ்டி முறையான அரசியல் தீர்வு என்பதை பலம் மிக்க நாடாளுமன்றம் ஒன்று அமையும் பட்சத்தில் பரிசீலித்து முன்னேற்றகரமான முடிவுகளை எதிர்காலத்தில் எட்ட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதுவரைக்கும் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் ஊடாகக் கொண்டுவரப் பட்ட மாகாண சபைக் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக தான் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறார் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். அதற்காகத் தான் தயாரித்து வைத்திருக்கும் யோசனைகள் அடங்கிய ஆவணம் ஒன்றையும் எம்மிடம் சமர்ப்பித்தார். ஏற்கனவே மாகாண சபையின் பறிக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் மீள வழங்குவார் எனவும், நிதி உட்பட மேலதிக அதிகாரங்களையும் பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுவையும் மாகாண சபை கொண்டிருக்கும் எனவும் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் சார்பில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, எஞ்சியுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு மற்றும் நில அபகரிப்பை தடுப்பது, தமிழ் இளைஞர்கள் யுவதிகள் நீதியற்ற முறையில் கைது செய்யப்படுவது, விசாரணை என்ற போர்வையில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் அச்சுறுத்தல் நடவடிக்கையை நிறுத்துதல், இந்திய மீனவர்களுடைய அத்துமீறலினால் எமது மீனவர்கள் படுகின்ற துன்பம், உட்பட பல விடயங்கள் தீர்க்கப்படவேண்டுமென வலியுறுத்தப்பட்டன.

இதற்கான தீர்வுகளை தான் நிச்சயமாக வழங்குவார் எனவும் ஏற்கனவே சில விடயங்களுக்கான தீர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் தொல்லியல் விவகாரங்களை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தான் சமர்ப்பித்த ஆவணத்தில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன எனவும், அவற்றைப் பரிசீலித்த பின்னர் தொடர்ந்தும் சந்திப்புகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

மக்களின் அரசியல் அபிலாசைகளைத் தீர்க்கும் முகமான மேலதிக கலந்துரையாடல்களை நடத்துவதற்கு தமது தரப்பிலும் தயாராக இருப்பதாக சொல்லிய தமிழ் தரப்பினர், அவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் சம்பந்தமான விடயங்களை ஆராய்ந்து கருத்து தெரிவிப்பதாக கூறியதுடன் சந்திப்பு நிறைவடைந்தது - என்றுள்ளது.

இந்த அறிக்கையில் உள்ள எந்த விடயங்களையும் உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி செயலகத்தால் இந்தச் சந்திப்புக் குறித்து உத்தியோகபூர்வ அறிக்கை எதுவும் நேற்று வெளியிடப்படவில்லை.

## பெருந்தோட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1000 ரூபா நாளாந்த சம்பளம் பெற்றுக்கொடுக்கப்படும் என உறுதியளித்தேன். அந்த உறுதிமொழியை நிறைவேற்றினேன். அதேபோல் 1700 ரூபாய் நாளாந்த சம்பளம் பெற்றுத்தருவதாக உறுதியளித்தேன். அந்த உறுதிமொழியும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1,700 ரூபாய் தொடர்பில் சம்பள நிர்ணய சபை எடுத்த முடிவு பெரும் வெற்றியாகும். அத்துடன், 1700 ரூபாய் சம்பளம் உயர்வைப் பெற்றுத்தர முழு ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன் -- என்றார்.

## 32 பேர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பணமும் செலுத்தப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி வேட்பாளர்களாக புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிடுவதற்கு ஓசல ஹேரத்தும், இலங்கை தொழிலாளர் கட்சி சார்பில் ஏ.எஸ்.பி.லியகேவும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சஜித் பிரேமதாசவும், தேசிய அபிவிருத்தி முன்னணி சார்பில் எஸ்.கே.பண்டாரநாயக்கவும், தேசிய ஜனநாயக முன்னணி சார்பில் விஜயதாஸ ராஜபக்ஷவும், ஐக்கிய சோஷலிச கட்சி சார்பில் சிறிதுங்க ஜயசூரியவும், புதிய சீஹல உருமய கட்சி சார்பில் சரத் மனமேந்திரவும், மற்றும் ஜனசேனா முன்னணி சார்பில் பத்தரமுல்லே சீலரத்ன தேரரும், அருனலு மக்கள் முன்னணியின் சார்பில் கே.ஆர்.கிறிஷானும், தேசிய மக்கள் சக்தி சார்பில் அனுரகுமார திஸாநாயக்கவும், சோசலிச சமத்துவ கட்சி சார்பில் பானி விஜேசிறிவர்தன, நவசமசமாஜக் கட்சி சார்பில் பிரியந்த புஸ்பகுமாரவும், எங்கள் மக்கள் சக்தி சார்பில் ஜே.டீ.கே.விக்கிரமரத்ன, இலங்கை சமசமாஜக் கட்சியின் சார்பில் மஹிந்த தேவகே, ஐக்கிய ஜனநாயக கூட்டணி சார்பில் அப்துல் மொஹமட் இன்பாஸ், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் அனோஜ டி சில்வா ஆகியோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

அதேவேளை அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி என்ற பிரிவில் றுஹுணு மக்கள் முன்னணி சார்பில் அஜந்த த சொய்சா கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

இதேவேளை சுயேட்சை வேட்பாளர்களாக ரணில் விக்கிரமசிங்க, சரத் கீர்த்திரத்ன, கே.கே.பியதாஸ, ஆனந்த குலரத்ன அக்மீமன தயாரத்ன தேரர், சிறிபால அமரசிங்க, சரத் பொன்சேகா, அன்டனி விக்டர் பெரேரா, ஐதுருஸ் முஹம்மது இல்யாஸ், மானகே பேமசிறி, அனுர சிட்னி ஜயவர்தன, டீ.எம்.பண்டாரநாயக்க, எம்.திலகராஜா, ரொஷான் ரணசிங்க, பா.அரியநேத்திரன், ஆகியோர் கட்டுப்பணம் செலுத்தியுள் ளனர்.

## தமிழ் முற்போக்குக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்ததாவது:

மலையகத் தமிழ் மக்கள் நலன் சார்ந்த, இத்தகைய ஒரு பரந்துபட்ட ஒப்பந்தம், ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருடன் இதுவரை இந்நாட்டில் செய்யப்படவில்லை. நாம் எதிர்நோக்கும், அரசியல், சமூக, கலாசார, பொருளாதார சவால்களை ஆவணமாகத் தொகுத்து நாம் ஐக்கிய மக்கள் கூட்டணி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையாக செய்து முடித்துள்ளோம். ஆகவே, இந்த நிகழ்வு இந்திய வம்சாவளி மலையக இலங்கையர் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் மிக்க நடப்பாக பதிவாகின்றது.

ஏழு அத்தியாயங்கள், நாற்பத்தியெட்டு அம்சங்களைக் கொண்ட இந்தப் பல்நோக்கு உடன்படிக்கை, 'மலையக சாசனம்' என்றும், 'மலையக சமூகத்துடனான ஒப்பந்தம்' என்றும் கூறப்படுகின்றது என சஜித் பிரேமதாஸவும், நானும், திகாம்பரமும் நிகழ்வில் உரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டோம்.

இந்த ஆவணம் விரைவில் பொதுப் பார்வைக்காக வெளியிடப்படும். கல்வி, தொழில் பயிற்சி, இளைஞர் முன்னேற்றம், சுகாதாரம், போஷாக்கு, வாழ்வாதாரக் காணி, தொழில் வாய்ப்பு, வீடமைப்புக் காணி, அரச பொதுநிர்வாக கட்டமைப்புக்குள் மலையகம், ஆட்சி உரிமையில் பங்கு ஆகிய தலைப்புகளின் கீழ் பல்வேறு விடயங்களை இந்த ஆவணம் புரிந்துணர்வு உடன்படிக்கையாகக் கவனம் செலுத்தியுள்ளது.

அதேவேளை, நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் தொழில் நோக்கில் கொழும்பு உட்பட மாநகரங்களில் குடிபெயர்ந்து நிரந்தரமாக வாழும் மக்கள் எதிர்நோக்கும் வீட்டு வசதி, கல்வி வாய்ப்பு போன்ற விசேட பிரச்சினைகளை பற்றியும் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கவனம் செலுத்துகின்றது - என்றார்.

## ஒக்டோபரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்புதலையும் வழங்கியுள்ளது. எனவே திட்டமிட்டபடி இந்தக் கொடுப்பனவுகள் ஓய்வூதியர்களுக்குக் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சம்பள வேறுபாடுகள் தொடர்பாக ஆராயும் குழுவினரின் அறிக்கை கிடைக்கப்பெற்று ஓய்வூதிய வேறுபாடுகள் மறுசீரமைக்கப்படும் வரையில் இடைக்கால நிவாரணமாக செப்டெம்பர் மாதம் முதல் இந்தக் கொடுப்பனவை வழங்க ஆளும் தரப்புத் தீர்மானித்திருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால், செப்டம்பர் மாதம் அந்த கொடுப்பனவை வழங்க தேர்தல் ஆணைக்குழு எதிர்ப்பு தெரிவித்ததால், அதனையும் சேர்த்து ஒக்டோபரில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நீதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழ் கொண்டு வந்து சேர்ப்பதாக ஜனாதிபதியினால் கடந்த வாரம் அதிவிசேட வர்த்தமானி அறிவிக்கை வெளியிடப்பட்டிருந்தது. தற்போது நீதி அமைச்சு அலி சப்ரி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாகக் கோட்டாபய ராஜபக்ச பதவி வகித்த காலத்தில் நீதி அமைச்சராகப் பதவி வகித்த அனுபவம் அலி சப்ரிக்கு உண்டு.

## வேட்புமனுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்துகொண்டிருக்கின்றோம். இன்னும் எங்களுக்கு ஒரு மாதத்தைவிட சற்று அதிகமான நாட்கள்தான் இருக்கின்றன. இந்தக் கொஞ்ச நாட்களில் நாங்கள் மிகவும் பலம் பொருந்திய வகையில் எமது தேர்தல் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வோம். கிராமங்களில் மிகவும் வலிமை மிக்க ஒரு ஒழுங்கமைப்பும் அதைப்போலவே, தேசிய மக்கள் சக்திக்குச் சொந்தமான பலம் பொருந்திய குழுக்களும் இருக்கின்றன. எனவே, இந்தத் தேர்தலை நிச்சயமாக எங்களால் வெற்றிகொள்ள முடியும்.

இந்தத் தேர்தலுக்குப் பின்னர் இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சவாலையும், எமது நாட்டை வளமான நாடாக மாற்றுவதற்கான சவாலையும், மக்களுக்கு நல்ல வாழ்க்கையை உரித்தாக்கிக்கொடுப்பதற்கான சவாலையும் தேசிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்ளத் தயார். எனவே, இன்று வேட்புமனுவில் நான் இட்ட இந்தக் கையொப்பம் இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிகரமான கையொப்பமிடலாக அமையும் என்பது நிச்சயம் - - - என்றார்.

# திருக்கோணேஸ்வரம் ஆலயம் சம்பந்தமாக ஆளுநர் ஏற்பாடுசெய்த கூட்டத்தில் குழப்பம்





ஞாயிற்றுக்கிழமை ஆளுநர் செந்தில் தொண்டமானால் யாப்புக்குமுரணானதிருக்கோணேஸ்வரம்ஆலயஅபிவிருத்தி சம்பந்தமான பொது சபை உறுப்பினர்களுக்கான கூட்டம் ஒன்று அவசர அவசரமாக நடத்தப்பட்டது.

அங்கு கருத்து தெரிவித்த செந்தில் தொண்டமான் திருக்கோணேஸ்வரம்ஆலயத்தில்ராஜகோபுரம்கட்டுவதற்கான ஏற்பாடு தன்னால் செய்யப்படுள்ளதாக தெரிவித்தார்,

அதனை தொடர்ந்து சோழர் காலத்து பல நூறு கோடி ரூபா பெறுமதியான தாலி ஒன்று களவு போய் உள்ளது எனத் தெருவித்தார்.

அதனைத்தொடர்ந்துகூட்டத்தைமுடித்தபோதுமக்களுக்கு கேள்விகேட்க வாய்ப்பு வழங்காமல் செல்ல முயன்றார்.

கூட்டத்துக்கு வருகை தந்த திருகோணமலையைச் சேர்ந்த ஆயுள் கால உறுபினர்கள் தமது கேள்விக்கு நீங்கள் பதில் கூறியே ஆக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்த காரணத்தால் பின் வரும் கேள்விகள் விளக்கங்கள் மக்களால் கூறப்பட்டன.

கடந்த 2009 ஆம் ஆண்டு நீதி மன்றதால் நிர்வாக சபையிடம் கோவிலை ஒப்படைக்கும் போது இப்படியான சோழர் காலத்து நகை என்ற ஒன்று இருக்கவில்லை, கடந்த சிவராத்திரி நிகழ்வில் ஆலயத்துக்கு சொந்தமான அனைத்து அசையும் அசையா சொத்து விவரங்களும் பெரிய திரையில் மக்கள் பார்வைக்கு காண்பிக்கபட்டது , அதில் எங்குமே சோழர் காலத்து நகை என்ற ஒன்று எங்குமே இருக்கவில்லை, அவ்வாறு இருக்க இப்படி சோழர் காலத்து நகை திருட்டு என்று செய்தி வெளியிட பின்னணி என்ன?

திருகோணமலையில் தீர்க்கப்பட வேண்டிய கன்னியா, கோணேசர் ஆலய சட்டவிரோத கடைகள் என்று எவ்வளவோ பிரச்சினை இருக்கும்போது அதை பார்க்காமல் இந்த மூன்று பவுண் தாலி விடயத்தை தூக்கி பிடித்த யாப்புக்கு முரணான கூட்டத்தின் நோக்கம் என்ன?

குடியியல் நீதி மன்றில் ஆலயம் தொடர்பான ஒரு வழக்கு நிலுவையில் இருக்கும் போது எழுத்து மூலம் எந்த அறிவித்தலும் இல்லாமல் இப்படி ஒரு சட்டத்துக்கு முரணான அவசர கூட்டம் கூட்ட வேண்டிய தேவை என்ன?

இவாறான மக்கள் கேள்விகளுக்கு பதில்கூற முடியாத செந்தில் தொண்டமான் வெளியே சென்றுவிட்டார். (05)

## நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பு பிரதான வீதியில் யுக்திய சோதனை



(பாறுக் ஷிஹான்)

சட்டத்தை மதிக்கும் நாட்டை உருவாக்கும் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக பொலிஸாரால் அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்தியத்தில் திட்டமிட்ட குற்றச்செயல்களையும் ஆபத்தான போதைப்பொருள்களைக் கடத்துவதையும் தடுப்பது மிகவும் அவசியமான நோக்கமாக யுக்திய பரிசோதனைமுன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சோதனை நடவடிக்கை நேற்று(திங்கட்கிழமை) நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பு பிரதான



வீதியில் மாலை முதல் இரவு வரை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது நற்பிட்டிமுனை



சேனைக்குடியிருப்பு பிரதான வீதி ஊடாக போக்குவரத்தில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்கள் சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

இப்பரிசோதனை நடவடிக்கை அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம ஆலோசனைக்கமைய கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி.எம். எல். புத்திகவின் வழிகாட்டலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் ஒருங்கிணைப்பில் கல்முனை பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் இவ்விசேட சோதனை நடவடிக்கையில் இணைந்திருந்தமை குறிப்பித்தக்கது.

மேலும் நாடு முழுவதும் பொலிஸாரால்மேற்கொள்ளப்பட்டு வரும் யுக்திய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் கீழ் பலர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கைதானவர்களிடமிருந்து ஐஸ் ஹெரோயின்போதை மாத்திரைகள் உள்ளிட்டவைகள் மீட்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான யுக்திய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட கடந்த 2023 ஆண்டு டிசெம்பர் 17 ஆம் திகதி முதல்தற்போது வரை குற்றச்செயல்கள் கணிசமானளவுகுறைந்துள்ளனஎனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## சஜித்தை வெற்றிபெறச் செய்வதற்கான வியூகங்களை ஆராய்கின்றது மு-.கா.

### ரவூப் ஹக்கீம் தலைமையில் அம்பாறையில் கூட்டம்







(பாறுக் ஷிஹான்)

2024 ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை வெற்றிபெறச் செய்வதற்கான வியூகங்கள் மற்றும் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் என்பன குறித்து விரிவாக கலந்துரையாட ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயற்குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை அட்டாளைச்சேனை ஸக்கி மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி அம்பாறை மாவட்ட செயற்குழுக் கூட்டம் முன்னாள் கல்முனை மாநகர உறுப்பினரும் கட்சியின்அம்பாறைமாவட்டஅமைப்பாளருமான ஏ.சீ.எம்.சமால்தீனின் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் , கட்சியின் தவிசாளர், பிரதித் தலைவர்கள், உயர்பீட உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், உலமாக்கள், புத்திஜீவீகள், கல்விமான்கள் என பலர் கலந்துகொண்டனர். (05)

## பிலிமத்தலாவையில் ரயில் மோதி அடையாளம் தெரியாத நபர் சாவு

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த சீக்ரகாமி ரயில் மோதி இனந்தெரியாத நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் பிலிமத்தலாவை மற்றும் மித்தெனிய ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின்அடையாளம் இதுவரை கண்டறியப்படவில்லை எனபொலிஸார்தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் 35 வயதுடைய 06 அடி 04 அங்குல உயரமும் ஊதா நிற காற்சட்டை, சாம்பல் நிற சேர்ட் அணிந்த ஆணொருவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும்,சடலமானது பேராதனை வைத்தியசாலையில் பிரேத அறையில்வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசார ணைகளை பேராதனை பொலி ஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.(05)

## சம்மாந்துறை வீட்டில் நகை கொள்ளை: திருட்டு சந்தேகநபர் ஒருவர் கைது

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறைபொலிஸ்பிரிவுக் குட்பட்ட மல் 9 ஆம் வீதியில் அமைந்துள்ள வீட்டில் ஞாயிற்றுக் கிழமை பெண் ஒருவர் உறங்கிக் கொண்டிருக்கும்போது அதிகாலை வேளை 3 மணியளவில் முகமூடி அணிந்தநபர்ஒருவர்பெண்ணைத் தாக்கி விட்டு நகைகளை கொள் ளையடித்து சென்றதாக ஞாயிற் றுக்கிழமை நகை உரிமையாளர் சம்மாந்துறை பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பாக சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ்.ஜெயலத்தின் வழிகாட்டு தலில் பொலிஸ் நிலைய பெருங் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினர் விசாரணை நடவடிக் கைகளை மேற்கொண்ட போது, கல்முனை பிரதேசத்தில் உள்ள நகைக்கடை ஒன்றில் நேற்று (திங்கட்கிழமை) திருடப்பட்ட நகையை மீட்டதுடன், திருட்டு சம்பவத்தில் தொடர்புடைய நபரை சம்மாந்துறைபிரதேசத்தில்வைத்து சம்மாந்துறை பெருங் குற்றப் புலனாய்வுப் பிரிவு உத்தியோ கத்தர்கள் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சம்மாந்துறை கை காட்டி பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் என பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந் துள்ளது.

குறித்தசந்தேகநபர்,தொடர்பான மேலதிக தகவல்கள் தெரிந் தால்சம்மாந்துறைபொலிஸ்நிலை யத்துக்கு தகவல் வழங்கும்படி பொலிஜார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## யானைகள் நலன் காப்போம்

நேற்று திங்கட்கிழமை உலக யானைகள் தினம். காட்டு யானைகளைப் பாதுகாக்கும் நோக்கில் அறிவிக்கப்பட்ட தினம். தெற்காசியாவில் யானைகளைக் கொண்டிருக்கும் முக்கியமான நாடுகளில் இலங்கையும் ஒன்று. ஆனால், யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதலால் ஒவ்வொரு ஆண்டும் அதிகளவில் யானைகள் உயிரிழக்கும் நாடுகளில் ஒன்றாகவும் இலங்கை விளங்குகின்றது.

2011 ஆம் ஆண்டு யானைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இலங்கையில் யானைகளின் எண்ணிக்கை 6000 என பதிவாகியுள்ளது. இதில் 55.09 சதவீதம் வயது கூடிய யானைகள் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. 25. 3 சதவீத யானைகள் மட்டுமே இள வயது யானைகள் எனவும் 12. 4 சதவீத யானைகள் குட்டி யானைகள் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் ஆபத்துக்குள்ளாகியிருக்கும் உயிரினங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ள ஆசிய வகை யானைகள் ஆகும்.

யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல் மற்றும் முரண்பாடுகள் அண்மைக் காலமாகத் தீவிரமாகிக் கொண்டே செல்கின்றன. இது சுற்றுச்சூழல் ஆர்வலர்களைப் பெரிதும் கவலைகொள்ள வைத்துள்ளது. எனினும் ஆளும் தரப்பு இது குறித்துப் போதிய அக்கறை செலுத்தவில்லை என்பது மிகப்பெரிய குற்றச்சாட்டாக இருக்கின்றது.

நீண்டகாலமாக இலங்கையில் யானைகளுடன் மனிதர்கள் இணக்கமாக வாழ்ந்தனர். விவசாயிகள் தங்கள் வயல்களில் அறுவடை செய்து முடித்ததும், அவற்றின் மீதிகளை யானைகள் உண்ண அனுமதிப்பார்கள். ஆனால் காடழிப்பு, முறைகேடான விவசாயங்கள், விவசாய அபிவிருத்தி என்கிற பெயரில் யானைகளைக் கவனத்தில்கொள்ளாமல் முன்னெடுக்கப்பட்ட அரச திட்டங்கள் மற்றும் பெரும் அபிவிருத்தி திட்டங்கள் நாட்டில் மனித– – யானை மோதலை அதிகரித்து வருகின்றன. மனிதர்களுடனான மோதலினால் ஏற்படும் யானைகளின் எண்ணிக்கையில் இலங்கை முதலிடத்தில் உள்ளது, மேலும் யானைகளால் ஏற்படும் மனித இறப்புகளில் இரண்டாவது இடத்தில் உள்ளது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் 800 யானைகள் இறந்துள்ளன. இந்த ஆண்டு முதல் 6 மாத காலத்திற்குள்ளேயே பல நூற்றுக்கணக்கான யானைகள் உயிரிழந்துள்ளன.

நாடு முழுவதும் மக்கள் தொகை அடர்த்தியை சமன்படுத்தும் முயற்சியில், யானைகள் அதிகம் உள்ள பகுதிகளில் மக்கள் குடியேற்றப்பட்டமை இந்த மோதலுக்கான மிக முக்கிய காரணம். குறைந்த வளங்களைக் கொண்ட பாதுகாக்கப்பட்ட வனவிலங்கு பூங்காக்களில் யானைகள் உட்பட அனைத்துவகை மிருகங்களும் வாழ வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. அங்கு அவற்றுக்கு உணவு மற்றும் தண்ணீரைத் தேடி அருகிலுள்ள கிராமங்களுக்குச் செல்கின்றன, இது பயிர்களை அழிப்பதற்கு வழிவகுக்கிறது, இதனால் விவசாயிகள் அவற்றை அகற்ற வன்முறை முறைகளைப் பயன்படுத்துகின்றனர். மற்ற சந்தர்ப்பங்களில், யானைகள் ஆக்ரோஷமாகி விவசாயிகளைத் தாக்கும்.

அதுமட்டுமல்லாமல் தொடர்ந்து பாதைகளைக் கடக்கும் யானைகள் மோதுண்டு இறக்கும் எண்ணிக்கையும் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஆளும்தரப்புக்களிடம் வலியுறுத்தப்பட்டாலும் அவை இன்னும் வெற்றிகரமாகச் சாத்தியமாகவில்லை. யானைகள் கடக்கும் இடங்களில் தொடர்ந்துகளின் வேகத்தைக் குறைப்பது மற்றும் யானைகள் கடந்துசெல்லக்கூடிய வகையில் தொடர்ந்து மேம்பாலங்களை அமைப்பது ஆகியவை தீர்வுகளாகச் சொல்லப்பட்டாலும் அவை எவையும் போதியளவில் செயற்படுத்தப்படவில்லை. அதனால் யானைகளின் இறப்புக்கள் குறைவடைவதாகவில்லை.

2048இற்குள் அபிவிருத்தியடைந்த நாடாவது என்கிற இலக்கோடு முன்னேறும் இலங்கை கூடவே யானைகளின் நலன் மீதும் அக்கறை செலுத்துவது அவசியமானது. யானைகளின்அழிவுஇலங்கையின்அழிவுக்குவழிவகுத்துவிடும். பல்லுயிர்களின் பரவல் இலங்கையில் உறுதிப்படுத்தப்படுவது ஆளும் தரப்புக்களின் கைகளிலேயே இருக்கின்றது. ஆளும் தரப்புக்கள் தவிர வேறு எந்தத் தரப்புகளாலும் இதுபோன்ற விடயங்களில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வது சாத்தியமற்றது. எனவே ஆளும் தரப்புக்கள் இதுவிடயத்தில் அதிக அக்கறை செலுத்துவதும் யானைகள் நலன் பேணும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதும் அவசியம்.

# திரிக்க முடியாதது வரலாறு!



ராமச்சந்திர குஹா

'கடந்த காலத்தை யார் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்களோ அவர்களே எதிர்காலத்தையும் கட்டுப்படுத்துகிறார்கள்; நிகழ்காலத்தைக் கட்டுப் படுத்துகிறவர்கள் கடந்த காலத்தையும் கட்டுப்படுத் துகிறார்கள்' என்பது '1984' என்ற நாவலில் ஜார்ஜ் ஆர்வெல் எழுதிய பிரபலமான வரிகள். ஜோசப் ஸ்டாலின் தலைமையிலான ரஷ்யாவை மனதில் கொண்டு ஆர்வெல் எழுதியது அந்த நாவல்.

ஆனால், அவர் சொன்னது உலகின் எந்தப் பகுதியிலும் ஆட்சி நடத்தும் ஆளுங்கட்சியும் அதன் சர்வாதிகாரத் தலைவரும் தங்களுக்கேற்ப வரலாற்றைத் திணிக்க முற்படுவதற்கு முற்றிலும் பொருந்துவது; இளையவர்கள் அல்லது முதியவர்கள், ஆடவர் அல்லது மகளிர், ஏழை அல்லது பணக்காரன், தன்பால் ஈர்ப்பாளர் அல்லது சாதாரணமானவன் - என்று அனைவர் மீதும் மேற்கொள்ளப்படுவதே வரலாற்றுத் திணிப்பு.

வெளிப்படையான சமூகத்தில், சமூகத்தின் அனைத்துத் தரப்பினர் மீதும் ஒரேயொரு வகைப்பாட்டில் மட்டும், 'இதுதான் வரலாறு' என்று திணித்துவிடவும் முடியாது. அமெரிக்காவில் குடியரசுக் கட்சியினர் ஆட்சியில் இருக்கும்போது, வெவ்வேறு பிரிவு மக்களுக்கிடையே உறவு எப்படி இருக்க வேண்டும் என்று கூற வெள்ளையினத்தை மேன்மைப்படுத்தியே கதைகளைக் கட்டுவர், ஆனால் மற்ற இனத்தவர் இதைத் தீவிரமாக கேள்விக் கேட்பார்கள்.

குறைபாடுகள் உள்ள அல்லது பகுதியளவே ஜனநாயகம்என்கிறஇந்தியாபோன்றநாடுகளிலும்கூட, அரசின்ஆதரவிலானவரலாற்றுக்கண்ணோட்டத்தை அப்படியே ஏற்காமல் தீவிரமாக விவாதிப்பார்கள். தங்களுக்கிருக்கும் அனைத்து அதிகாரத்தையும் திரட்டி, இந்து -முஸ்லிம் உறவு தொடர்பாக ஒருவிதச் சித்திரத்தைத் தீட்ட நரேந்திர மோடி அரசு முயற்சி செய்தது.

இந்தியக் குடியரசின் முதல் பிரதமரான ஜவ ஹர்லால் நேருவின் பங்களிப்புகளைக் குறைத்துக் காட்டி அவரை சிறுமைப்படுத்த தீவிரமாக முயன்றது. ஆயினும்இணையதளங்களிலும்பதிப்பகங்களிலும், யூட்யூப்களிலும், பழைய செய்தித்தாள்களிலும் உண்மை என்ன என்பது பதிவாகியிருப்பதால், உண்மை என்னவென்று புரிந்தவர்களால் வரலாற் றைத் தவறில்லாமல் எடுத்துரைக்க முடிகிறது. இப்படி தனித்தனியாக ஆங்காங்கே ஒலிக்கும் சில குரல்களையும் அடக்கிவிடத்தான், புதிய ஒலிபரப்பு (தடை) சட்டமூலத்தை மோடி அரசு தயாரித்துக்கொண்டிருக்கிறது.

### சீன கம்யூனிஸ்ட் கட்சி

மக்கள் எப்படிச் சிந்திக்க வேண்டும் - அல்லது சிந்திக்கக் கூடாது என்று மண்டையை உடைத்துக்கொண்டு யோசித்து, கட்டுப்படுத்தும் வேலையை இப்போதைய காலகட்டத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியைப் போல வேறு எவருமே செய்வதில்லை. சீனத்தின் கடந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் ஆகியவற்றை மக்கள் விரும்பும் வகையில் அறியவும், சீனத்தில் நடந்தவற்றை நியாயப்படுத்தவும் நான்கு அடிப்படைகளின் மீது சீன கம்யூனிஸ்ட் கட்சி செயல்படுகிறது.

முதலாவது, சீன கம்யூனிஸ்ட் கட்சி எப்போதுமே - எதையுமே சரியாகத்தான் செய்கிறது, அது தவறே செய்யாது, அதன் தலைவரும் (முன்பு மா சேதுங் இப்போது ஜி ஜின்பிங்) எப்போதுமே சரியான முடிவுகளையே எடுப்பார்கள், தவறுகளுக்கு இடம்தரவே மாட்டார்கள்.

இரண்டாவது, கட்சித் தொண்டர்களும் நிர்வாகிகளும், சீனத்தின் மாபெரும் தலைவரும் அல்லும்பகலும், வசந்தம் "கோடை" இலையுதிர்காலம் - குளிர்காலம் என்று எல்லா பருவங்களிலும் சீனத்தை எப்படி மேலும் உயர்த்துவது, நாட்டை எப்படி வலிமையாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பது, மக்களை வளமாகவும் மகிழ்ச்சியாகவும் எப்படி வைத்திருப்பது என்பதையே 'இடைவிடாமல் சிந்தித்து' உழைத்துக்கொண்டிருக்கின்றனர்.

மூன்றாவது, அரசின் அல்லது கட்சியின் கொள்கைகளை, நிர்வாகத்தைப் பொதுவெளியிலோ - தனிப்பட்ட முறையிலோ விமர்சிப்பவர்களும், கேலி பேசுவோரும் 'நாட்டின் எதிரிகள்', அன்னிய நாடுகளின் கைக்கூலிகளாகச் செயல்படுகின்றனர்.

நாலாவது, இந்த விமர்சனங்களையும் விமர்சகர்களையும் கட்சி உடனடியாகவும் கடுமை யாகவும் ஒடுக்காவிட்டால் 1949இல் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் இருந்த 'இருண்ட கால'த்துக்குச் சீனம் திரும்பிவிடும், மக்கள் பல்வேறு அம்சங்கள் அடிப்படையில் பிளவுபட்டு தங்களுக்குள் மோதலிலும் உள்நாட்டுப் போரிலும் ஈடுபடுவர், அதன் மூலம் மேற்கத்திய நாடுகளின் கைப்பிடிக்குள் நாடு சென்றுவிடும்.

வரலாறு குறித்து கட்சி என்ன நினைக்கிறதோ அதற்கு மாறுபட்டுச் சிந்திப்பதை, இந்திய ஆட்சியாளர் களைவிட சீன ஆட்சியாளர்கள் மிகக் கடுமையான குற்றமாகக் கருதுவார்கள் - அமெரிக்கா ஒரு பக்கம் இருக்கட்டும். 1949 முதல் ஆளும் அரசுக்கு எதிராகப் பேசுவதோ எழுதுவதோ மிகப் பெரிய ஆபத்தைக் கொண்டுவந்து சேர்க்கும், வேலை போய்விடும், கைதும் செய்வார்கள், 'கட்சி கூறும் வரலாற்றையா நம்ப மறுக்கிறாய்?' என்று சிறையில் அடைத்து அடித்து உதைத்து சித்திரவதை செய்வார்கள் - சமயங்களில் கொலைகூட செய்துவிடுவார்கள்.

ஆனால், சமீபத்தில் வெளியாகியுள்ள சில புத்தகங்களைப் படிக்கும்போது, நவீன சீனத்தின் உண்மையான வரலாற்றைத் தங்களுடைய நாட்டவருக்குக் கூறிவிட வேண்டும் என்று எப்படியெல்லாம் சிலர் துணிந்திருக்கிறார்கள் என்பதை அறிந்து வியப்பு ஏற்படுகிறது. நாட்டின் வரலாறு மட்டுமல்ல, கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றையும்கூட அவர்கள் 'உள்ளது உள்ளபடியே' எழுதியுள்ளனர்.

### இயான் ஜான்சன் புத்தகம்

சீனஅரசால்வெளியேதள்ளப்படும்வரையில்அந்த நாட்டில் பல ஆண்டுகள் நிருபராக இருந்த இயான் ஜான்சன், சீனத்துக்குள்பயணித்துஏராளமானோரைச் சந்தித்துதகவல்களைத்திரட்டியும்நேர்காணல்மூலம் அறிந்தும் இந்த நூலை எழுதியிருக்கிறார். நூலின் பெயர் 'ஸ்பார்க்ஸ்: சீனா'ஸ் அண்டர்கிரௌண்ட் ஹிஸ்டோரியன்ஸ் அண்ட் தெய்ர் பேட்டில் ஃபார் த ஃப்யூச்சர்' (Sparks: China's Underground Historians and Their Battle for the Future).

கட்டுரையாளர்கள், நிருபர்கள், வலை எழுத்தாளர்கள், ஆவணப்பட தயாரிப்பாளர்கள் என்று பலதரப்பட்டவர்களையும் சந்தித்திருக்கிறார். வரலாற்றை எழுதும் அதேவேளையில் சீன நாட்டின் பன்மைத்துவம் வாய்ந்த நிலப்பகுதி, நகர்ப்புற - கிராமப்புற வாழ்க்கை, பண்பாடு மற்றும் நாகரிக வளர்ச்சியின் வரலாறு, வளம் மிகுந்த கலைத் துறை, இலக்கியம், மெய்யியல் பாரம்பரியம் என்று அனைத்தையும் சித்தரித்திருக்கிறார்.

கம்யூனிஸத்துக்கும் அப்பாற்பட்ட சீனத்தை நமக்கு அறிமுகப்படுத்துவதுடன், கம்யூனிஸம் இல்லாத சீனம் இருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று சிந்திக்கவும் வைக்கிறார்.

### மாவோவின் கொடுங்கோன்மை

1949 முதல் 1976இல் இறக்கும் வரை சீன மக்கள் மீது மாசேதுங் கட்டவிழ்த்துவிட்ட கொடுமைகளை ஒன்றுவிடாமல் நூலில் விவரித்திருக்கிறார். மாவோவின் வளர்ச்சிக்கு,

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# திரிக்க முடியாதது வரலாறு!

4ம் பக்க தொடர்ச்சி...........

'எதிரிகள்' தேவைப்பட்டார்கள், எனவே அவர்களை எங்கும் அவர் அடையாளம் கண்டார்.

பண்ணைகளில், ஆலைகளில், நகரங்களில், கிராமப்புறங்களில் – ஏன் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளேயும்கூட. நேர்மையாகவும் கடுமையாகவும் பாடுபட்ட லட்சக்கணக்கான அப்பாவிகளை மாவோவின் குண்டர்கள், 'எதிர்ப்புரட்சியாளர்கள்' என்று முத்திரை குத்தி, 'மக்களின் எதிரிகள்' என்று பட்டம் சூட்டி கடுமையான ஒடுக்குமுறைகளுக்கு ஆளாக்கினார்கள். அவர்களில் அதிருஷ்டம் செய்தவர்கள் வேலை பறிப்பு, குடியிருப்பு இடிப்பு, உழைப்பு முகாம்களில் இடுப்பொடிய கடுமையான வேலை என்ற தண்டனைகளோடு தப்பித்தார்கள், மற்றவர்கள் வரம்பில்லாமல் ஆண்டுக்கணக்கில் சிறையில் அடைக்கப்பட்டதுடன் கொல்லப்பட்டும் இறந்தனர்.

மாவோவுக்கு விநோதமான வேட்கைகளும் கொலை செய்யும் நோக்கங்களும் இருந்தன. 1956இல் நாட்டு மக்களைப்பார்த்து, 'உங்கள் மனங்களில் உள்ளதையெல்லாம் அப்படியே வெளிப்படையாகப் பேசுங்கள் ஆயிரம் பூக்கள் பூக்கட்டும்' என்றார். இதை உண்மையென்று நம்பி அப்படியே மனங்களில் உள்ளதையெல்லாம் சொன்னவர்களில் பலரை, 'தீவிர வலதுசாரிகள்' என்று முத்திரை குத்தி அவர்களுடைய 'சிந்தனையைத் தெளிவாக்கும் நடவடிக்கைக'ளுக்கு உள்ளாக்கினார். வலதுசாரிகளுக்கு எதிராக பெரிய இயக்கத்தையே தொடங்கிவைத்தார்.

எழுத்தாளர்கள், மாற்றுச் சிந்தனை கொண்ட ஆசிரியர்கள், மாணவர்கள், வழக்கறிஞர்கள், அரசுத் துறை நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், அறிவியலாளர்கள் என்று பலரும் வெவ்வேறு வகைகளில் தண்டிக்கப்பட்டனர். எவருமே சுய சிந்தனையுடன் இருக்க அனுமதிக்கப்படவில்லை. இந்த நடவடிக்கையின்போது பல்கலைக்கழகங்கள், உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள், ஆய்வு நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள்கூட தீயிட்டுக் கொளுத்தப்பட்டன என்கிறார் ஜான்சன்.

ஆயிரக்கணக்கானோரை கடுமையான 'உழைப்பு முகாம்க'ளுக்கு அனுப்பினர், எஞ்சியவர்களை எச்சரித்து, கட்சியின் கட்டளை மற்றும் சிந்தனைக்கேற்ப தங்களைத் திருத்திக்கொள்ளுமாறு அனுப்பிவிட்டனர்.

### தலைமறைவு வரலாற்றினர்

ஜான்சன் தன்னுடைய நூலில், 'தலைமறைவு வரலாற்றினர்' என்று சிலரைக் குறிப்பிடுகிறார், அவர்கள் எல்லாம் அரசால் சிறைக்கும் உழைப்பு முகாமுக்கும் அனுப்பப்பட்ட, கொல்லப்பட்டவர்களின் உடன் பிறந்தவர்கள் அல்லது வாரிசுகள். சீன கம்யூனிஸ்ட் ஆட்சியின் இருண்ட பக்கங்களை உலகம் அறிய வேண்டும் என்பதற்காக அவர்கள் பல தகவல்களைப் பகிர்ந்துள்ளனர்.

மாவோவின் சிந்தனையில் உதித்த, பிறகு அறிவித்து செயல்படுத்தப்பட்ட 'பெரும் பாய்ச்சல்' (கிரேட் லீப் பார்வேட்), 'கலாச்சாரப் புரட்சி' (கல்சுரல் ரெவல்யூஷன்), 'திபெத்தை நாசமாக்கு' போன்ற சிறப்பு திட்டங்களின் பின்னாலிருக்கும் உண்மையான தகவல்களை அவர்கள் பகிர்ந்துள்ளனர்.

### 21வது நூற்றாண்டின் முற்பகுதியில்

சீன அரசுக்கு எதிரான அதிருப்தியாளர்கள் பலர் 21ஆவது நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்துள்ளனர். அது 'வெளிப்படையான காலம்' என்று அழைக்கப்படுகிறது. அரசு கூறிக்கொள்ளும் வரலாற்றுச் சாதனைகளின் உண்மைத்தன்மையைக் கேள்விக்குள்ளாவது, அசைத்துப் பார்ப்பது, மறுத்துப் பேசுவது அவர்களுடைய நோக்கமாக இருந்திருக்கிறது. வெளிப்படையாகவும் மனிதாபிமானத்துடன் இருந்த சீனத்துக்குத் தங்களைப் பிரதிநிதியாகக் கருதியதால், அரசின் அடக்குமுறைக்கு எதிராக எழுதவும் ஆவணப்படங்களைத் தயாரிக்கவும் அவர்கள் துணிந்துள்ளனர்.

### ஜி ஜின்பிங்குக்குப் பிறகு

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகவும் நாட்டின் அதிபராகவும் ஜி ஜின்பிங் பதவியேற்ற 2012க்குப் பிறகு இப்படிக் கருத்து தெரிவிப்பதும்கூட மிகவும் கடினமான செயலாகிவிட்டது. ஜி ஜின்பிங் ஆட்சிக்கு வந்த புதிதில், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றை மிகச் சிறந்த முறையில் 'வெளிச்சத்துக்குக் கொண்டுவர' விருப்பம் தெரிவித்தார். ஏராளமான வரலாற்று ஆசிரியர்கள் திரட்டப்பட்டு கட்சி அடைந்த 'மாபெரும் வெற்றிகளையும்' மிகவும் 'அபாரமான அறிவார்ந்த சாதனைகளையும்' தொகுத்து வரலாற்று நூல் எழுதுமாறு பணிக்கப்பட்டனர்.

கட்சியின் தலைவர்களும் தொண்டர்களும் கடந்த காலத்தில் நாட்டுக்காக எப்படியெல்லாம் உழைத்திருக்கிறார்கள், தியாகங்களைச் செய்திருக்கிறார்கள் என்று இளம் சீனர்கள் சரியான முறையில் புரிந்துகொள்ளுமாறு வரலாற்றைத் தயாரிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அதேசமயம், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றைச் சிதைக்கவோ திரிக்கவோ எந்த முயற்சியிலும் ஈடுபடக்கூடாது, அப்படி ஏதேனும் எண்ணம் ஏற்பட்டாலும் அதை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும் என்றும் தகுந்த முறையில் அறிவுறுத்தப்பட்டார்கள்.

மாவோ காலத்தில் இருந்ததைவிட ஜி ஜின்பிங் காலத்தில் அரசின் கண்காணிப்பும் ஒடுக்குமுறையும் கடுமையாகிவிட்டபோதிலும், வருவது வரட்டும் என்று சிலர் துணிச்சலாக உண்மைகளைப் பதிவுசெய்துவருகின்றனர். 'சீனத்தில் ஆட்சிமுறை மாறியபோதிலும் தனிமனித சுதந்திரச் சிந்தனை இன்னமும் உயிர்ப்புடன்தான் வாழ்கிறது, அதை எவராலும் நசுக்க முடியவில்லை. வரலாற்றைத் திரிப்பதில் கட்சி எப்போதும் ஜெயித்துவிட முடியாது என்று காட்ட எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள் தொடர்கின்றனர்' என்கிறார் ஜான்சன்.

### ஜியாங் ஹியூ

இந்த நூலில் குறிப்பிடப்படும் சில தனிநபர்களின் தார்மிக மற்றும் உடல் துணிவு மட்டும் அல்ல அவர்களுடைய அறிவார்ந்த தெளிவும் என்னைக் கவர்ந்தன. ஜியாங் ஹியூ என்ற பெண் எழுத்தாளர் கம்யூனிஸ்ட் சீனத்தில் வரலாற்றை எழுதுவது குறித்துத் தெரிவிக்கும் கருத்து இதோ: 'வரலாற்றைத் திருத்தி எழுதுங்கள் என்றார் சேர்மன் மாவோ; வரலாறு என்பது நிகழ்ந்துவிட்டவற்றின் பதிவுதானே, அதை எப்படித் திருத்தி எழுதுவது? இது ஒன்றும் நாவல் அல்லவே – சம்பவங்களையும் முடிவுகளையும் விருப்பப்படி திருத்தி எழுதி வெளியிட? இது வரலாறுதான் என்றால், இதை எப்படி திருத்தி எழுதிவிட முடியும்? மனசாட்சியுள்ள எவரும் 'திருத்தி எழுதப்பட்ட'வரலாற்றை நிராகரிக்கவே செய்வார்கள்' என்கிறார்.

ஜாங் ஷி என்ற பத்திரிகையாளர் கூறுகிறார், 'நான் ஏன் உண்மைகளை எழுதுகிறேன் என்றால், இவர்கள் எழுதும் பொய்யான வரலாற்றைப் படிக்கும்போது எனக்கு கோபம் கொப்பளிக்கிறது, நான் உண்மையைப் பேசியே தீர வேண்டும்.'

இன்னொருவர் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் கல்வியாளர். 'அரசியல் என்ன, குருடர்களை வழிநடத்தும் பைத்தியக்காரர்களின் நிகழ்வா?' என்று கேட்கிறார்.

'கம்யூனிஸ்ட் கட்சியால் வழிநடத்தப்படும் சீனம் போன்ற நாட்டில் இப்படி உண்மைகளைப் பதிவுசெய்கிறேன் என்ற முயற்சி அர்த்தமற்றது, தேவையும்படவில்லை, இதுவொன்றும் இந்த ஆட்சியின் மீது எந்த மாற்றத்தையும் கொண்டுவந்துவிடாது' என்று ஜியாங் ஹியூவிடம் அவருடைய தோழி கூறுகிறார். 'உன்னுடைய கருத்தை என்னால் ஏற்க முடியாது. நீ முயற்சி செய்தால் அதற்கு நிச்சயம் பயன் இருக்கும். 'அசாதாரண'மான இந்தச் சமூகத்தில், நான் 'சாதாரணமானவ'ளாக இருக்க விரும்புகிறேன். உண்மைகளைச் சொல்ல என்னால் முடியும், என் மனதில் உள்ளதை அப்படியே பதிவுசெய்வேன்' என்று பதில் அளிக்கிறார் ஜியாங் ஹியூ!

© த டெலிகிராப்

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சியம்பலங்கமுவ நீர்த்தேக்கத்தில் மூழ்கி இளைஞன் பரிதாபச் சாவு

குருணாகல், மீகலாவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சியம்பலங்கமுவ நீர்த்தேக்கத்தில்நீராடிக்கொண்டிருந்த இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என மீகலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தசம்பவம்ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

நீரில் மூழ்கி உயிரிழந்தவர் குருணாகல், மீகலாவபிரதேசத்தை சேர்ந்த 21வயதுடைய இளைஞன் ஆவார்.

உயிரிழந்த இளைஞன் மேலும் இரண்டு நபர்களுடன் இணைந்து ஞாயிற்றுக்கிழமை மாலை சியம்பலங்கமுவநீர்த்தேக்கத்திற்கு நீராடச் சென்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மீகலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கண்டி எசல பெரஹராவை முன்னிட்ட சோதனைகளில் ஆயுதங்கள் மீட்பு

கண்டி எசல பெரஹராவை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தலதா வீதியில் உள்ள இரண்டு கடைகளில் இரண்டுரிவோல்வர்ரகதுப்பாக்கிகள், 21%2 அடிநீளவாள்என்பனவிஷேட அதிரடிப்படை மற்றும் வெடிகுண்டு செயலிழப்பு குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக, இரண்டு கடைகளின்உரிமையாளர்களையும் விசாரணைக்காக கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இரண்டு ரிவோல்வர் ரக துப்பாக்கிகள் , வாள் என்பன பழைய பொருள்கள் விற்கப்படும் இரண்டு கடைகளில்கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த, துப்பாக்கிகள் பாவனை செய்யும் நிலையில் காணப்படவில்லைஎனவும்,இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# சிறைச்சாலை பஸ் - பௌசர் விபத்து; பஸ்ஸின் சாரதிக்குச் சிறு காயம்

மொனராகலை பிபில பிரதான வீதியின் தம்வத்த பிரதேசத்தில் சிறைச்சாலை பஸ் மற்றும் பால் ஏற்றிச் சென்ற பௌசரும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் சிறைச்சாலை பஸ் சாரதி சிறு காயங்களுக்குள்ளாகி மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

மொனராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# பெருந்தோட்டத் தொழிலாளர் சம்பளம்: குறித்த பேச்சுக்கள் தேர்தல் சட்ட மீறல்

## ட்ரான்பெரன்ஷி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா அறிவிப்பு





ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விவகாரம் குறித்து பேச்சில் ஈடுபடுகின்றமை தேர்தல் சட்ட மீறலாகும் என ட்ரான்பெரன்ஷி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா தெரிவித்துள்ளது.

மேலும், இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடளிப்போம் எனவும் தெரிவித்துள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விவகாரம் குறித்து பேச்சு நேற்று (திங்கட்கிழமை) இடம்பெறுகின்றது.

நேற்றுஇதற்குஒருதீர்க்கமானமுடிவுஎட்டப்படும்என எதிர்பார்ப்பதாக சம்பள நிர்ணய சபையில் அங்கத்துவம் வகிக்கும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விவகாரம் குறித்து பேச்சில் ஈடுபடுகின்றமை தேர்தல் சட்டமீறலாகும் என ட்ரான்பெரன்ஷி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா தெரிவித்துள்ளது.

(05)

# 16 வயது சிறுவனை கடத்திய விவகாரம்; 2 கான்ஸ்டபிள்கள் உட்பட நால்வர் கைது

பதினாறு வயது சிறுவனை காரில் கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பில் ஒரே குடும்பத்தை சேர்ந்த இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபில் இருவரில் ஒருவர் ஹோமாகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் எனவும் மற்றையவர் மீகொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் எனவும் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்டமற்றையஇருவரும்பரகடுவமென்னாரபிட்டிய மற்றும் பட்பேரிய ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 29 மற்றும் 31 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

எம்பிலிபிட்டிய பல்லேகம பகுதியை சேர்ந்த 16 வயதுடைய சிறுவன் ஒருவரை காரில் கடத்திச் செல்வதாக எம்பிலிபிட்டிய பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், எம்பிலிபிட்டிய நோனாகம பகுதியில் உள்ள வங்கி ஒன்றிற்கு முன்பதாக வைத்து இந்த கார் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விசாரணையில், இந்த காரினுள் கடத்தப்பட்ட சிறுவனும் நான்கு சந்தேக நபர்களும் இருந்துள்ள நிலையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)



# வழியனுப்பிட வாரீர்!




## திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா (B.Ed)

(அதிபர் - The Express Institute)

யாழ்/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் (1975 – 1982)
யாழ்/பலாலி ஆசிரியர் கலாசாலை (1982 – 1983)
யாழ்/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் (1984 – 1988)
யாழ்/நீர்வேலி றோ.க.த.க. வித்தியாலயம் (1989 – 1993)
யாழ்/மத்திய கல்லூரி (1993 – இளைப்பாறும்வரை)

**விடை எழுதவைத்த ஆசானுக்கு;**
**விடை கொடுக்கும் நேரமிது.**

இடம் : The Express Institute வளாகம்
காலம்: இன்று செவ்வாய்க்கிழமை ( 13.08.2024 )
நேரம்: பி.ப 01.00

தசாப்தங்கள் பலவாய் தன்பணியைச் செவ்வனவே ஆற்றிய ஆசானின் முன்னைநாள் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அவர்பால் அன்பு கொண்டுள்ள அனைத்து உள்ளங்களையும் நிறுவனமுன்றலில் ஒன்று கூடி, அன்னாரது புகழுடலை பேரணியாய் அழைத்துச் செல்வோம் வாரீர் !

The Express Institute
Irupalai Junction, Kopay.

## ஹெரோயினுடன் இருவர் வாதுவையில் கைது

களுத்துறை, வாதுவை பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட மொல்லிகொட பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருட்களுடன் இருவர் ஞாயிற் றுக்கிழமை கைது செய்யப்டுபட்டுள் ளனர் என வாதுவை பொலிஸார் தெரிவித்தனர்.

வாதுவை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில்சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொல்லிகொட பிரதேசத்தைச் சேர்ந்த 42 மற்றும்43வயதுடையஇருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரிடமிருந்து 05கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயினும் மற்றையவரிடமிருந்து 05 கிராம் 340 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற் றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வாதுவை பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (05)

## நகைக் கடையில் நகை திருடிய பெண் சம்மாந்துறையில் கைது

பிரபலநகைக்கடை ஒன்றில் நகை திருடப்பட்டுள்ளதாக நகைக் கடை உரிமையாளர் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை முறைப்பாடு செய்திருந்தார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந் துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விளினியடி பௌசியா மாவத்தை பிரதேசத்தில் அமைந்துள்ள பிரபல நகைக்கடை ஒன்றில் கடந்த புதன் கிழமை நகை திருடப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட் டிற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரிகேடிஎஸ்ஜெயலத்தின் வழிகாட்டுதலுக்கமைய பொலிஸ் நிலைய பெருங் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர்தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை துரிதமாக மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது சம்மாந்துறை பெருங்குற்றப் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் அம்பாறை பிரதேசத்தில் உள்ள நகைக்கடை ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை குறித்த திருட்டு சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபரான அம்பாறை ஹிங்கு ரான பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய பெண்ணை திருடப்பட்ட நகைகளுடன் கைது செய்துள்ளனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் டீசல் திருட்டு; 80 லீற்றர் டீசலைக் கைவிட்டுத் தப்பியது கும்பல்

யாழ்ப்பாணத்தில் புகையிரதத்தில் இருந்து டீசல் திருடிய கும்பல் ஒன்று தப்பி சென்றுள்ள நிலையில், திருடப்பட்ட 80 லீற்றர் டீசல் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 09 ஆம் திகதி இரவு ரயில் நிலைய அதிகாரிகள் காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் தரித்துநின்ற ரயில்களை கண்காணித்த போது, ரயில் இயந்திரத்தில் இருந்து திருட்டு கும்பல் ஒன்று டீசல் திருட்டில் ஈடுபட்டிருந்ததை கண்ணுற்று அவர்களை மடக்கிப்பிடிக்க முற்பட்ட வேளை அவர்கள் தப்பி சென்றுள்ளனர்.

இந்நிலையில், அவர்கள் கொண்டு வந்திருந்த 20 லீற்றர் கொள்வனவு உடைய 4 கொள்கலன்களில் டீசல் நிரப்பப்பட்ட நிலையில் அதனை கைவிட்டு தப்பி சென்றிருந்தனர்.

அதனை அடுத்து அவற்றை அதிகாரிகள் மீட்டு இருந்தனர்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளநிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளைகாங்கேசன்துறைரயில்நிலையத்தில் தரித்து நிற்கும் ரயிலில் இருந்து தொடர்ச்சியாக டீசல் திருடப்பட்டு வந்தமையாலேயே, அதிகாரிகள் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வந்தனர் எனவும், இந்நிலையிலேயே 09ஆம் திகதி டீசல் திருடியவர்களை மடக்கி பிடிக்க முற்பட்ட வேளை அவர்கள்தப்பிசென்றுஇருந்ததாகதெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், வடக்கு நோக்கி வரும் ரயில்களுக்கு அநுராதபுரத்தில் டீசல் நிரப்பப்படுவதாகவும், அதனால் ரயில் டீசல் தாங்கியின் திறப்பு அநுராதபுரத்தில் உள்ளதாகவும், அவ்வாறு இருக்கும் நிலையில், காங்கேசன்துறையில் டீசல் தொடர்ச்சியாக திருடப்பட்டு வந்தமையால், ரயில் நிலைய ஊழியர்களும் திருட்டுக்கு உடந்தையாகச் செயற்பட்டு இருக்கலாம் எனும் சந்தேகத்தில் திணைக்கள ரீதியான விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (05)

# 2 எம்.பிக்களின் இடங்கள் வெற்றிடம் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாந்து ஆகியோரின் நாடாளுமன்ற உறுப்புரிமைகள்இரத்துச்செய்யப்பட்டதன்காரணமாக கடந்த 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வெற்றிடம் ஏற்பட்டிருப்பதாக நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

1981ஆம்ஆண்டின்1ஆம்இலக்கநாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64 (1) மற்றும் 64 (5) பிரிவின்படி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார மற்றும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாந்து ஆகிய இருவரையும் கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியால் எடுக்கப்பட்ட தீர்மானம் சட்டபூர்வமானது என உயர்நீதிமன்றம் 9 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியிருப்பதால் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

முன்னாள்அமைச்சர்களானமனுஷநாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் தமது கட்சி உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் சட்டத்திற்கு முரணானது எனக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியிருந்தது. (05)

# மாணவர்களுக்கு சின்னம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு



(எம்.எப்.றிபாஸ்)

அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை அல் முனீரா பெண்கள் உயர் தரப் பாடசாலையில் மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் விழாவும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் பாடசாலையில் இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.சீ.நியாஸ் தலைமையில் நடைபெற்றஇந்நிகழ்வுக்கு கல்விப்பணிமனையின் உதவிக்கல்விப்பணிப்பாளர்எம்.சித்திபாத்திமாபிரதம அதிதியாகக்கலந்துகொண்டார்.பாடசாலையின்பிரதி, உதவி அதிபர்கள் உட்பட ஆசிரியர்கள்,மாணவர்கள் பங்கு பற்றிய நிகழ்வில் பிரதம அதிதியால் மாணவர்களுக்கு சின்னம் மற்றும் சான்றிதழ் என்பன வழங்கி வைக்கப்பட்டன. (05)







# விக்கினேஸ்வரமூர்த்தி ஞாபகார்த்த வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டி



கிளிநொச்சிமாவட்டவலைப்பந்தாட்ட சங்கம் நடத்திய 16 வயதுக்குற்பட்ட பாடசாலைமாணவர்களுக்கிடையிலான அமரர் விக்கினேஸ்வரமூர்த்தி ஞாபகார்த்த வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டி கிளிநொச்சி பொது விளையாட்டு மைதான உள்ளக அரங்கில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.

வைத்தியசாலைப்பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, கௌரவ விருந்தினராக கரைச்சி மற்றும் பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

மேற்படி இறுதிப்போட்டியில் கிளிநொச்சிபரந்தன் இந்துமகாவித்தியாலயம் மற்றும் புனித சென்திரேசா பெண்கள் கல்லூரி என்பன மோதிக்



மாவட்டவலைப்பந்தாட்டசங்கத்தின் உபதலைவர் சந்தனம்பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்கதிபர் எஸ்.முரளீதரன், சிறப்பு விருந்தினராக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், ஆ.மோகனதாஸ், யாழ்.போதனா

கொண்டன.

22:18 என்ற கணக்கில் புனித திரேசா பெண்கள் கல்லூரி பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தை வீழ்த்தி முதல் இடத்தைப்பெற்றுக்கொண்டது. மூன்றாவது இடத்தை முட்கொம்பன் மகாவித்தியாலயம்பெற்றுக்கொண்டது. (05 - 113)

# விமான நிலையத்தில் பயணிகள் நெரிசல்

## கட்டுநாயக்கவில் நீண்ட வரிசைகளில் சுற்றுலாவிகள்

இலங்கைக்குவருகைதரும்பயணிகளுக்குஇணையவழிமூலம்விசாவழங்கப்படாததால் விசா பெற்றுக்கொள்ளுவதற்கு கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் செல்லும் பயணிகள் நீண்ட வரிசைகளாகக் காத்திருந்துள்ளனர்.

இதனால், கட்டுநாயக்க விமான நிலையத்தில் பயணிகள் நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கு வருகை தருபவர்கள் இணையவழி விசா முறைமைக்கு மாறாக மீண்டும் பழைய முறைப்படி விமான நிலையத்திற்கு வருகை தந்து விசா பெற்றுக்கொள்ள வேண்டும் என உயர்நீதிமன்றம் கடந்த 2 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது.

இதனால், விசா பெற்றுக் கொள்ளுவதற்கு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தரும் பயணிகள் நீண்ட வரிசைகளாகக் காத்திருக்க வேண்டியுள்ளது.

கண்டி எசல பெரஹெராவைக் காண ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவதால் விசா பெற்றுக்கொள்ளுவதற்குப் பயணிகள் நீண்ட வரிசைகளாகக் காத்திருப்பது சிரமத்திற்குள்ளாகியுள்ளது.

(05)

# திருமண நிழ்விற்கு சென்றுவிட்டு திரும்பியோர் சிக்கினர் விபத்தில்

## 8 மாத குழந்தை உள்ளிட்ட மூவர் பரிதாபச் சாவு

கொழும்பு - கண்டி வீதியில் வேவல்தெனிய பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற வாகன விபத்தில் 8 மாத குழந்தை உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


உயிரிழந்தவர்கள் கெலிஓயா பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் திருமண நிகழ்வொன்றில் கலந்து கொண்டுவிட்டுவீடுதிரும்புகையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நிட்டம்புவவிலிருந்து கண்டி நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாரதியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், காயமடைந்த மூவரில் இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, ஒருவர் வறக்காப்பொல வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என தங்கோவிட்ட பொலிஸார் தெரிவித்துள்ளார். (05)

# அரனின் நண்பர் ஆலாலசுந்தரர்!



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி
இயக்குநர்
மெல்பேண் .... ஆஸ்திரேலியா**

சிற்றின்ப மெரித்த சிவனாரின் தொண்டன்
சிற்றின்ப வலைக்குள் சிக்குண்டு போனான்
அற்பமாம் சுகத்தை அகங் கொண்டதாலே
அவனியில் பிறவென அரனுமே பணித்தார்

பயமுடன் கேட்டு பணிந்துமே நின்று
கழலினைத் தொழுது கைகூப்பி நின்றான்
புவனியில் பிறவென புகன்றது கேட்டு
அலமந்து நின்று அரனடி பற்றினான்

காத்திட வேண்டும் கருணைக் கடவுளே
கைபிடித் தென்னைக் கடைத் தேற்றுவாயே
மாநிலம் பிறக்கா வண்ணமாய் எனக்கு
வழிகாட்டு என்று மனதார வேண்டினான்

ஆலால சுந்தரா அடைக்கலம் அளிப்பேன்
அவனி பிறந்து அனைத்தையும் அனுபவி
உரிய நேரம் உனைவந்து காப்பேன்
என்றே வுரைத்தான் எலும்பணி மார்பன்



ஆலால சுந்தரர் அவனியில் பிறந்தார்
அவரகம் புகுந்த அனந்திகை கமலினி
சுந்தரர் கரத்தைப் பற்றியே பிடித்திட
வந்துமே பிறந்தார் வாழ்வைச் சுவைக்க

திரு முனைப்பாடி செய்தவப் பயனாய்
தவநிறை சுந்தரர் காலடி பதித்தார்
சடங்கவி இசைஞானி தந்தை தாயானர்
சன்மார்க்கம் நாயகன் பிள்ளையாய் அமைந்தார்

அழகுடைபிள்ளையைஅள்ளியேஅணைத்தனர்
ஆண்டவன் அருளென அகமதில் எண்ணினர்
வளர்ந்தது குழந்தைவண்ணமாய்வண்ணமாய்
மன்னவன் வருவழி குழந்தையைக் கண்டனன்

அரசனின் மனத்தில் ஆசை எழுந்தது
அழகுடை குழந்தையை அவன்வச மாக்கிட
பெற்றவ ரிடத்து விருப்பினை உரைத்தான்
கொற்றவன் விருப்பை பெற்றோர் மதித்தார்

அழகுடைப் பிள்ளை அண்மனை அமர்ந்தது
அணிகலன் ஆடைகள் சுகபோகம் கண்டது
அரச குமாரனாய் வளர்ந்துமே வந்தது
அனைவரும் விரும்பிடும் இளைஞனாய் நின்றது

கொற்றவன் மகிழ்ந்தான் பெற்றவர் மகிழ்ந்தார்
நற்றவப் பிள்ளையின் வளர்ச்சியைக் கண்டு
உற்றவர் மதிக்க ஊரார் வியக்க
உவப்புடன் திருமணம் செய்திட விளைந்தார்

மங்கல நாளினில் யாவரும் கூடினார்
மணமகன் வந்தான் மணமகள் வந்தாள்
இடியென கிழப் பிராமணர் தோன்றினார்
அடிமைஇவனெனஅனைவர்க்கும்முழங்கினார்

மணமகன்வெகுண்டுமறுத்துமேஉரைத்தான்
கிழவரோ உரிய சான்றினைக் காட்டினார்
அடிமை என்பதை அனைவரும் ஏற்றிட
அத்தாட்சி அங்கே உறுதியாய் அமைந்தது

கொதிப்புடன் மணமகன் பித்தனே என்றான்
கிழவரோ எதற்கும் அஞ்சா நின்றார்
வழக்கினை நடத்திட வாவென் றழைத்து
மணமகன் தொடர நடந்தார் வயோதிபர்

மணமகன் பின்னே யாவரும் நடந்தனர்
வயோதிபர் விரைவாய் கோவிலுள் நுழைந்தார்
நுழைந்தவர் காணா மலைத்தனர் அனைவரும்
மாதொரு பாகன் பேருரு காட்டினான்

பித்தனே என்றவன் பிரமித்து நின்றான்
பெம்மான் அவனைப் பாடுக என்றார்
எப்படிப் பாடுவேன் ஏங்கியே கேட்டான்
திட்டிய வார்த்தையைத் தேர்ந்திடு என்றார்

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளாய்
முத்தாகத் தமிழாக பக்தியாய் மலர்ந்தது
விழித்தான் பக்தன் மெய்யுணர் வெய்தினான்
தத்துவம் பக்தி தமிழில் நிறைந்தது

சுந்தரர் பக்தி தோழமைப் பக்தி
செந்தமிழ் அடியார் போற்றிடும் பக்தி
அந்தமில் அன்பில் விளைந்த நல்பக்தி
ஆண்டவன் அருகினில் அணைந்திடும் பக்தி

பூதலம் பிறந்த காதல் பெண்களை
கைத்தலம் பற்றிட வைத்த நல்பக்தி
காதல் தூதாய் கறைக்கண்டன் சென்றிட
கட்டளை இட்ட கனிவுடைப் பக்தி

பக்திச் சுவையினைப் பருகப் பருக
சேக்கிழார் காப்பியம் ஆக்கியே அளித்தார்
காப்பியப் பொருளைக் கொடுத்தவர் சுந்தரர்
காலம் முழுதும் நினைக்கிறார் யாவரும்

சுந்தரர் பாடல்கள் சுவையுடைப் பாடல்கள்
செந்துருப் பண்ணில் சிறந்திடும் பாடல்கள்
சம்பந்தர் அப்பர் தொட்டிடாப் பண்ணே
தமிழுக்கு வாய்த்திட்ட வரமான பண்ணே

ஏழாந் திருமுறை ஆகியே நின்று
எங்கள் சைவம் காத்திட வந்தது
ஆழமாங் கருத்தை அடக்கியே வைத்து
ஆலால சுந்தரர் அருந்தமிழ் ஈந்தது

வன்தொண்டர்பெயரினைப் பெற்றிட்ட போதும்
வன்மமே இல்லா மென் தொண்டராகினார்
கயிலை நாதனே கயிலை அழைத்தார்
காமம் கலைந்தது கலந்தார் சுந்தரர்

அரச வாழ்வில் வாழ்ந்தார் சுந்தரர்
ஆனால் அகத்தில் அரனே நிறைந்தார்
மண்ணக வாழ்வினைப் புண்ணிய மாக்கினார்
மாசிலா மனத்துடன் வையகம் இருந்தார்

பக்தியில் நட்பினை புகுத்திய அடியார்
பரமனைப் பற்றியே வாழ்ந்த நல்லடியார்
முத்தியைக் கூட நட்புக்கும் பகிர
சுத்தமாம் மனத்துடன் கேட்ட நல்லடியார்

(11.08.2024 அன்று சுந்தரரின் குருபூசை தினம். அதையொட்டி எழுதப்பட்ட கவிதை இது)

# தமிழ் பொது வேட்பாளருக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டது

ஜனாதிபதி தேர்தலில், தமிழ் பொதுக் கட்டமைப்பால் சுயேச்சை வேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ள பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் சார்பில் தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று (திங்கட்கிழமை) கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினரான, த.சிற்பரன் பொது வேட்பாளருக்கான கட்டுப்பணத்தை செலுத்தினார்.

(05)

# சர்வதேச யானைகள் தினத்தின் நிகழ்வுகள் சிறப்பாக நடந்தன




சர்வதேச யானைகள் தினமான நேற்று (திங்கட்கிழமை) கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தில் யானைகளை பாதுகாப்போம் என்ற தொணிப்பொருளில் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

பாடசாலையின் முதல்வர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.சிவசங்கரும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் வனஜீவ ராசிகள் திணைக்கள உத்தியோகத்தர் ஆ.சசிகரன், சுற்றுச்சூழல் அதிகார சபையின் உத்தியோகத்தர் எஸ்.லதீஸ்குமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





பாடசாலையின் அனைத்து வகுப்பு மாணவர்களும் யானைபோல் வேடம் அணிந்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர். உலக யானை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக் கப்பட்டது. (05 - 113)

# நடன ஆசிரியையின் படத்தை நிர்வாணமாக வடிவமைத்து பதிவிட்ட 2 மாணவர்கள் கைது

மாத்தளை நகரத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் நடன ஆசிரியை ஒருவரின் புகைப் படத்தை நிர்வாண புகைப்படமாக வடிவமைத்து சமூக ஊடகங்களில் பதிவிட்டதாகக் கூறப்படும் அதே பாடசாலையில் கல்வி கற்கும் இரு மாணவர்கள் நேற்று (திங்கட்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளனர்; என மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

10 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் மாத்தளை மற்றும் வாரியப்பொல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இரு மாணவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிட்டம்புவ வேயன்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த நடன ஆசிரியை ஒருவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட ஆசிரியையால் மாத்தளை பொலிஸ் நிலையத்திற்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்களான இரு மாணவர்களும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு மாணவர்களும் மாத்தளை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.08.2024இல் வெளியிடப்பெற்றது